செ.வெ.எண்: 63 நாள்: 31.01.2020

# பத்திரிக்கை செய்தி

கரூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற 06.02.2020 அன்று தாந்தோன்றிமலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் காலை 08.00 மணி முதல் மாலை 03.00 வரை நடைபெறவுள்ளது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் 80க்கும் மேற்பட்ட தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 3000க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்பவுள்ளனர். இம்முகாமில் 5ம் வகுப்பு முதல் 12ம்வகுப்பு வரையிலான பள்ளிக்கல்வி முடித்தோர் டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள் மற்றும் பொறியியல் பட்டதாரிகளும், தையற் பயிற்சி, நர்சிங் பயிற்சி உள்பட பல்வேறு பயிற்சி பெற்றவர்களும் கலந்து கொண்டு பணி வாய்ப்பினை பெறலாம். இம்முகாம் முற்றிலும் இலவசமானது. வேலை வேண்டி விண்ணப்பிப்போர், தங்களுடைய சுய விவரம் (Bio Data) உரிய கல்விச்சான்றுகள் மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றுடன் கலந்து கொண்டு பயன் பெறலாம். இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் www.ncs.gov.in என்ற இனையதளத்தில் முன்பதிவு செய்து கொள்ளலாம். வேலையளிப்போரும் மற்றும் வேலை வேண்டுவோரும் முகாம் தொடர்பான விவரங்களுக்கு, தொலைபேசி எண்: 04324 – 223555 என்ற எண்ணிற்கு தொடர்புக் கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.த.அன்பழகன்,**இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**